**செ.வ.எண்: 28** **நாள்:13.09.2021**

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் சிறப்பு தூர்வாரும் திட்டத்தின் கீழ் தூர்வாரப்பட்ட பணிகளையும், ஆசிய வளர்ச்சி வங்கி திட்டப் பணிகளையும், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.வி.அருண்ராய் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட அட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டார்.**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சிறப்பு தூர்வாரும் திட்டத்தின் கீழ் தூர்வாரப்பட்ட பணிகளையும் ஆசிய வளர்ச்சி வங்கி திட்டப் பணிகளையும், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.வி.அருண்ராய் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட அட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் அன்று 12.09.2021 ஆய்வு மேற்கொண்டார்.

நாகப்பட்டினம் மாவட்டம் கீழையூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட திருப்பூண்டி பண்டாரத்தான் வாய்க்கால் சிறப்பு தூர்வாரும் திட்டப் பணிகளின் கீழ் 4 கி.மீ நீளம் ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் தற்போது தூர்வாரப்பட்டு தண்ணீர் செல்லும் வடிகாலையும், அதே திட்டத்தின் கீழ் தற்போது தூர்வாரப்பட்டு தண்ணீர் செல்லும் சீரவட்டனார் வாய்க்காலையும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர் தலைஞாயிறு ஒன்றியத்திற்கு உட்பட்ட அரிச்சந்திரா நதியின் குறுக்கே ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் காவிரி டெல்டாவில் உள்ள வெண்ணாறு உபவடிநிலத்தை தட்பவெப்பநிலை மாறுபாடுகளுக்கு மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் ரூ.960.66 கோடி மதிப்பீட்டில் 98 பாசன கட்டுமானங்களை புனரமைத்தல், ஆறுகளை முழுவதுமாக தலைப்பு முதல் கடைமடை பகுதி வரை தூர்வாருதல், ஆறுகளின் கரைகளை வளப்படுத்துதல் ஆறுகளின் கடைமடை பகுதிகளில் புதிய கடைமடை நீரொழுங்கிகள் அமைத்து கடல்நீர் உட்புகுதலை தடுத்தல் கரைகளில் தார்சாலை அமைத்தல், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் படித்துறைகள், நெற்களம் அமைத்தல் நிலத்தடிநீர் செறிவூட்டுதல் மற்றும் 8 மின்இறைவை பாசனப்பணிகளை புனரமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவற்றில் 75% பணிகள் முடிவுற்றுள்ளது.

இத்திட்டத்தால் 1,10,347 ஏக்கர் நிலம் பாசன மேம்பாடு பெற்றுள்ளது. மேலும் இத்திட்டத்தால் பாதிக்கப்பட்ட பயனாளிகளுக்கு மீள்குடியேற்றம் மூலம் 369 பயனாளிகளுக்கு வீடும், 316 பயனாளிகளுக்கு பணப்பயனும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தலைஞாயிறு ஒன்றியத்திற்கு உட்பட்ட அரிச்சந்திரா நதியின் குறுக்கே ஆசிய வளர்ச்சி வங்கி நிதி திட்டத்தின் கீழ் ரூ.3 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் ஆலங்குடி இயக்க அணை கட்டுமானப் பணிகளையும், ரூ.7.5 கோடி மதிப்பீட்டில் முதலியப்பன்கண்டி புதிய கடைமடை இயக்கஅணை கட்டுமானப் பணிகளையும், மீதம் நடைபெற வேண்டிய பணிகளையும், பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், கீழையூர் ஊராட்சி ஒன்றியம், வேட்டைக்காரனிருப்பு ஊராட்சியில் உள்ள புயல் பாதுகாப்பு மைய கட்டிடத்தை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர் திரு.வி.அருண்ராய் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (12.09.2021) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் செயற்பொறியாளர் திரு.கெ.தங்கராஜ், உதவிசெயற்பொறியாளர் திரு.பாண்டியன், உதவி பொறியாளர்கள் திரு.கமலக்கண்ணன், திரு.சண்முகம், கீழையூர் மற்றும் தலைஞாயிறு வட்டார வளர்ச்சி அலுவலர்கள், கீழ்வேளுர் வட்டாட்சியர் திரு.மாரிமுத்து மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**